# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Vol : 01 | Issue : 33 | 4 Pages | 03.09.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
| மலர் : 01 | இதழ் : 33 | 4 பக்கங்கள் | 03.09.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வரலாற்றில் முதல் முறையாக பாகிஸ்தானில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.300ஐ தொட்டது



இஸ்லாமாபாத், செப். 3


பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது. குறிப்பாக பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. சில நாட்களுக்கு பிறகு பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டு ஒரு லிட்டர் ரூ.280க்கு மேல் விற்றது. இந்தநிலையில் பாகிஸ்தான் வரலாற்றில் முதல் முறையாக பெட்ரோல்ஒருலிட்டர்ரூ.300ஐதாண்டிஉள்ளது.பாகிஸ்தானில்தற்போதுள்ள காபந்து அரசாங்கம், பெட்ரோல் லிட்டருக்கு ரூ.14.91 உயர்த்தி உள்ளது. இதனால் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.305.36க்கு விற்கப்படுகிறது. டீசல் லிட்டருக்குரூ.18.44உயர்த்தப்பட்டுரூ.311.84க்குவிற்கிறது.மண்எண்ணெய் விலை உயர்த்தப்படவில்லை. கடந்த ஆகஸ்டு 15ந்தேதி காபந்து அரசாங்கம், எரிபொருளின்விலையை லிட்டருக்கு ரூ.20 வரை உயர்த்தி இருந்த நிலையில் இரண்டு வாரங்களில் மேலும் விலையை அதிக அளவில் உயர்த்தி உள்ளது மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. விலைவாசி உயர்வால் அவதியடைந்து வரும் மக்கள் இந்த கடுமையான பெட்ரோல்டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். விலை உயர்வை கண்டித்து கராச்சியில் மக்கள் போராட்டம் நடத்தினர். அதேபோல் மற்ற இடங்களிலும் போராட்டத்திலும் ஈடுபட்டனர். பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்டுள்ளது. இதற்காக சர்வதேச நாணய நிதியம் பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது. இதில் மானியங்களை தவிர்க்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பெட்ரோல்டீசல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது.

## பிரிட்டனில் ஆபத்தான கட்டிடத்தில் செயல்படும் 150 பள்ளிகள் மூடல்

லண்டன், செப். 3

பிரிட்டனில் கோடை விடுமுறை முடிந்து அடுத்த வாரம் பள்ளிகள் தொடங்க உள்ளன. இந்தநிலையில் அங்கு பெரும்பாலான பள்ளிகள் ஆபத்தானகான்கிரீட்கட்டிடத்தில்செயல்படுவதாககூறப்படுகிறது. இதனால் பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்து மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனையடுத்து மாணவர்களின் பாதுகாப்பு கருதி ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடங்களில் செயல்படும் 150 பள்ளிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. எனவே கல்வி பாதிக்கப்படாமல் இருக்க வேறு இடங்களில்அப்பள்ளிகள்செயல்படுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டின் பள்ளிக்கல்வித்துறை மந்திரி கில்லியன் கீகன் கூறினார்.

## "லூனா 25" விழுந்து நிலவில் 10 மீட்டர் பள்ளம்: நாசா வெளியிட்ட அதிர்ச்சி புகைப்படம்



ரஷ்யா, செப். 3

நிலவின் தென் துருவ பகுதியை ஆராய சந்திரயான் 3 விண்கலத்தை இந்தியா அனுப்பியதற்கு போட்டியாக ரஷியா லூனா25 விண்கலத்தை அனுப்பியது. சந்திரயான் 3 விண்கலத்தின் லேண்டர் தரையிறங்குவதற்கு முன்பாக லூனா25 விண்கலத்தை தரையிறக்க ரஷிய விண்வெளி நிறுவனம் தீவிரமாக செயல்பட்டது. புவி மற்றும் நிலவின் சுற்றுவட்ட பாதைகளை அதிவேகமாக கடந்து சென்ற லூனா25 விண்கலத்தை தரையிறக்குவதற்கு முந்தைய சுற்றுவட்டபாதைக்குள் கடந்த மாதம் 19ம் தேதி நுழைக்கும் போது கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து நொறுங்கியது. இந்த லூனா25 விண்கலம் விழுந்த இடத்தை நிலவை கண்காணித்து வரும் அமெரிக்கவிண்வெளிநிறுவனமானநாசாவின்ஆர்பிட்டர்படம்பிடித்துள்ளது. லூனா 25 விண்கலம் தரையிறங்க வேண்டிய இடத்துக்கு அருகில் புதிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால், இது லூனா25 விண்கலம் விழுந்த இடமாக இருக்க வாய்ப்புள்ளது என எல்ஆர்ஓ குழு முடிவு செய்துள்ளது. இந்த புதிய பள்ளம், 10 மீட்டர் அகலத்தில் உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. மேலும், நிலவின் குறிப்பிட்ட பகுதியை 2020 ஆம் ஆண்டு எடுத்த புகைப்படத்தோடு, தற்போது லூனா 25 விழுந்த பிறகு எடுத்த புகைப்படத்தையும் ஒப்பிட்டு நாசா வெளியிட்டுள்ளது.

## கொள்ளை கும்பல் மீது போலீசார் துப்பாக்கிச்சூடு தென் ஆப்பிரிக்காவில் 18 பேர் சுட்டுக் கொலை

ஜோகனஸ்பர்க், செப். 3

தென் ஆப்பிரிக்காவில் கொள்ளை கும்பல் மீது போலீசார் தாக்குதல் நடத்தினர். இதில் கொள்ளை கும்பலைச் சேர்ந்த 18 பேர் உயிரிழந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

தென் ஆப்பிரிக்காவின் லிம்போபோ மாகாணத்தில் வங்கிகளுக்கு பணம் எடுத்துச் செல்லும் வாகனத்தை மறித்து பணத்தைக் கொள்ளையடிக்க ஒரு கும்பல் திட்டமிட்டுள்ளதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து சென்று தீவிர கண்காணிப்பு பணியில்




ஈடுபட்டனர். அப்போது போலீசார் மீது கொள்ளை கும்பலைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக கூறப்படுகிறது. இதையடுத்து, போலீசார் பதில் தாக்குதல் நடத்தினர். இந்ததுப்பாக்கிச்சூட்டில் கொள்ளை கும்பலைச் சேர்ந்த 16 ஆண்கள், 2 பெண்கள் உள்பட மொத்தம் 18 பேர் உயிரிழந்ததாக போலீசார் தெரிவித்தனர். இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆதவனை நோக்கிய பயணம் விண்ணில் வெற்றிகரமாக பாய்ந்தது ஆதித்யா எல்1

ஆந்திர பிரதேஷ், செப். 3

7 முக்கிய கருவிகளில், 4 கருவிகள் சூரியனை நேரடியாக ஆய்வு செய்கின்றன. ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள்களின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். மேலும் படிக்க சூரியனில் உள்ள காந்தப்புயலை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்1 என்ற புதிய விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இந்தியாசார்பில்முதன்முதலில் சூரியனைக் கண்காணித்து ஆய்வு செய்ய அனுப்பப்படும் முதல் விண்கலம் என்ற பெருமையையும் ஆதித்யா எல்1 விண்கலம் பெறுகிறது. இதில் பெங்களூவில் உள்ள ஐ.ஐ.எம். கல்வி நிறுவனம் வடிவமைத்த 7 ஆய்வுக்கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன. பூமியில் சுமார் 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் 'லெக்ராஞ்சியன் பாயிண்ட் ஒன்' என்னும் இடத்தில் இந்த விண்கலம்



நிலை நிறுத்தப்பட்டு குறிப்பாக, சூரியனை நோக்கிய கோணத்தில் நிறுத்தப்படுகிறது. இந்தக் கருவிகள் சூரியனின் வெப்பம், காந்த துகள்கள்வெளியேற்றம், விண்வெளியின் காலநிலை, விண்வெளியில் உள்ள துகள்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய இருக்கிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வுமையத்தில் பி.எஸ்.எல்.வி. சி57 ராக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்தது. இதையடுத்து, ராக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணியான 24 மணி நேர கவுண்ட்டவுன்நேற்று முற்பகல் 11.50 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள்களின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், பி.எஸ்.எல்.வி. சி57 ராக்கெட் திட்டமிட்டப்படி இன்று பகல் 11.50 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. 7 முக்கிய கருவிகளில், 4 கருவிகள் சூரியனை நேரடியாக ஆய்வு செய்கின்றன. 3 பேலோடுகள் லெக்ராஞ்சியன் புள்ளியில் உள்ள துகள்கள், புலங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மும்பை தமிழ் சிறுமியின் ஆசையை நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்

மும்பை, செப். 3

நான் உங்களை பெரிதும் விரும்புகின்ற காரணத்தால் உங்களை குடும்பத்துடன் சந்திக்க ஆர்வமாக உள்ளேன். உங்களைசந்திக்கஎங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம்.

மும்பை சென்றிருந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு மும்பையை சேர்ந்த வேணுகோபால் அய்யங்கார் என்பவர் டுவிட்டர் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதில் மும்பைக்கு வருகை தந்து உள்ள தங்களைவரவேற்கிறேன். என்னுடைய மகள் உங்களை சந்திக்க விரும்புகிறாள். எனவே தயவு கூர்ந்து நீங்கள் தங்கி இருக்கும் கிராண்ட் ஹையாத் ஓட்டலில் சந்



திக்க நேரம் ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டிருந்தார். இது தொடர்பாக அவரது மகள் டுவிட்டரில் குரல் வடிவில் பதிவிட்டது வருமாறு: நான் உங்களை பெரிதும் விரும்புகின்ற காரணத்தால் உங்களை குடும்பத்துடன் சந்திக்க ஆர்வமாக உள்ளேன். இந்த தருணத்தில் நீங்கள் மும்பை வருவதால் அதுவும் எனக்கு நல் வாய்ப்பாக அமைந்து விட்டது. என்னுடைய பெற்றோரும், தாத்தாவும் உங்களை பெரிதும் விரும்புவார்கள். உங்களை சந்திக்க எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

இதையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் தங்கி இருந்த இடத்திற்கு அவர்களை வரவழைத்து சந்தித்து பேசி, அச்சிறுமியையும், அவரது குடும்பத்தினரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

# அவினாசி பேரூராட்சி கூட்டம்



அவினாசி, செப். 3

சாலையோர கடைகள் அனைத்தையும் வேறு தனியான ஒரு இடத்திற்கு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாக்கடை வசதி இல்லாததால் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி சுற்றுச்சுவர் சாக்கடை நீர் தேங்கி பெயர்ந்து விழுகிறது.

அவினாசி பேரூராட்சி கூட்டம் தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் மோகன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மன்ற பொருள் படித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதை அடுத்து வார்டு உறுப்பினர்கள் பேசியதாவது: தங்கவேல் (3வது வார்டு): அவினாசி பேரூராட்சியில் புது பஸ் நிலையம் முதல் பழைய பஸ் நிலையம் வரையிலும் மற்றும் தாலுகா அலுவலகத்தில் இருந்து செங்காடு வரை சாலையோர கடைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்த கடைக்காரர்களிடம் ரூ.5 வாங்கிக்கொண்டு வியாபாரம் நடத்த பேரூராட்சி நிர்வாகம் அனுமதித்து வருகிறது. இதனால் தொழில் வரி, லைசென்ஸ், ஜி.எஸ்.டி. செலுத்தி வாடகைக்கு கடை எடுத்து நடத்தி வருபவர்கள் வியாபாரம் வெகுவாக பாதிப்பதாக வியாபாரிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும் அதிக அளவில் சாலையோர கடைகள் பெருகி வருவதால் போக்குவரத்து மிகவும் பாதிப்பு ஏற்படுவதுடன் விபத்துக்கள் நடக்கிறது. எனவே சாலையோர கடைகள் அனைத்தையும் வேறு தனியான ஒரு இடத்திற்கு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வரி இனங்கள் செலுத்துபவர்களிடம் பாதி தொகை கொடுத்து மீதி தொகையை கட்ட சில நாட்கள் தவணை கேட்டால் அதற்கு நிர்வாகம் ஒத்துழைப்பு தராமல் முழுவதையும் கட்டினால் தான் முடியும் என்று கூறி குடிநீர் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர். ஏரி தோட்டத்தில் வடிகால் அமைக்க முதல்அமைச்சர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடியே 21 லட்சம் வழங்கிய தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், மற்றும் பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்குநன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ரமணி (17 வது வார்டு): மார்க்கெட் பகுதிக்குள் 40 கடைகள் வெறுமனே கிடக்கிறது. சாலையோர கடைகளை அங்கு கொண்டு செல்லலாம். கார்த்திகேயன் (13 வது வார்டு): சங்கமம் குளம் வீதியில் சாக்கடை வசதி இல்லை. அங்கு சாக்கடை வசதி இல்லாததால் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி சுற்றுச்சுவர் சாக்கடை நீர் தேங்கி பெயர்ந்து விழுந்து வருகிறது. மேலும் அப்பகுதியில் வாழும் மக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதுகுறித்து பல கூட்டங்களில் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. எனவே நான் மன்ற கூட்டத்தை விட்டு வெளிநடப்பு செய்கிறேன் என்று கூறியவாறு வெளிநடப்பு செய்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வாலிபர் பலி

பல்லடம், செப். 3

பலத்த காயம் அடைந்த அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம்அரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தாயார் லதா கொடுத்த புகாரின் பேரில் பல்லடம் போலீசார் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

ஈரோடு அருகே உள்ள நாராயணன் வலசு பகுதியைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி என்பவரது மகன் சந்தானமுருகன் (வயது 30). இவர் பல்லடம் அருகே உள்ள கரடிவாவியில் உள்ள சலூன் கடையில் வேலை பார்த்துவருகிறார். இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் கரடிவாவியிலிருந்து பல்லடம் நோக்கி சென்று கொண்டிருந்தார். பல்லடம் அருகே உள்ள அய்யம்பாளையம் வந்தபோது மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி ரோட்டில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

இதில் பலத்த காயம் அடைந்த அவரை, அந்த வழியே சென்றவர்கள் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு முதலுதவி பெற்று, மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று சந்தான முருகன் உயிரிழந்தார்.

இதுகுறித்து அவரது தாயார் லதா கொடுத்த புகாரின் பேரில் பல்லடம் போலீசார் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# எப்.எம்.ஜி தேர்வில் இந்திய அளவில் முதலிடம்: தமிழக மாணவருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாராட்டு

மாமல்லபுரம், செப். 3

24 ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதியதில் இந்திய அளவில் இக்கல்லூரியில் பயின்ற மாணவர் முதலிடம். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.



மாமல்லபுரத்தில் உள்ள கிங்ஸ் மெடிக்கல் அகாடமியில் பயிற்சி பெற்று அதன் மூலமாக பிலிப்பைன்ஸ் நாட்டின் தாவோ மெடிக்கல் கல்லூரியில் படித்த மாணவர்கள், 2023ம் ஆண்டிற்கான எப். எம்.ஜி தேர்வை இந்தியாவில் எழுதினர். 24 ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதியதில் இந்திய அளவில் இக்கல்லூரியில் பயின்ற மாணவர் கரீம் ஜாஃபர் சவுகர் முதலிடம் பிடித்து டாக்டர் ஆனார்.

அவர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அகாடமி நிறுவனர் டேவிட் கே.பிள்ளை, ம.தி.மு.க துணை பொதுச் செயலாளர் மல்லை சத்யா, இயக்குனர் சி. கே.சி.பால் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பொள்ளாச்சி வழியாக கோவையில் இருந்து திருச்செந்தூருக்கு இரவு நேர ரெயிலை இயக்க வேண்டும்

கோவை, செப். 3

கோயமுத்தூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தல் வணிகர்களுக்கு உரிய இழப்பீடு, ஓய்வூதியம் வழங்கவும் தீர்மனம்




கோயமுத்தூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க பொதுக்குழு கூட்டம் இந்திய தொழில் வர்த்தக சபை அரங்கில் நடந்தது. ஆர்.எஸ்.கணேசன் தலைமை தாங்கினார். ராதாகிருஷ்ணன், பாருக், ரமேஷ், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் அப்துல் ரஹிமான் வரவேற்றார். பொதுக்குழு கூட்டத்தில் நிலவில் தென் துருவத்தில் சந்திரயான்3 விண்கலத்தை தரையிறக்கி சாதனை படைத்த இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவிப்பது, கோவையில் இருந்து திருச்செந்தூருக்கு இரவு நேர விரைவு ரெயிலை பொள்ளாச்சி, திண்டுக்கல், மதுரை வழியாக இயக்குவதற்கான நடவடிக்கைகளில் சேலம் கோட்ட ரெயில்வே அதிகாரிகள் ஈடுபட வேண்டும், இயற்கை பேரிடர் மற்றும் தீ விபத்துகளால் பாதிக்கப்படும் வணிகர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும், பொட்டல பொருட்களுக்கு உரிமம் வழங்குவதில் இரட்டை முறையை மாற்றி அமைத்து உணவு பாதுகாப்பு துறையிடம் உரிமம் பெற்றால் போதும் என சட்ட விதிகளை மாற்றி அமைக்க வலியுறுத்துவது, தியாகி குமரன் மார்க்கெட் நுழைவு வாயில் வளைவு பெயர் பலகை அமைத்து தர வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. இதில் ஆர்.எஸ்.கணேசன் புதிய தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# கடலூர் மாவட்டத்தில் புயல் பேரிடர் மாதிரி ஒத்திகை

கடலூர், செப். 3

மாவட்ட நிர்வாகத்திற்கு, சென்னை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார். பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்புயல்சூழ்நிலைகளை எதிர்கொள்வது தொடர்பான மாதிரி ஒத்திகை பயிற்சியினை, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் இணைந்து நடத்த வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு, சென்னை கூடுதல்தலைமைச்செயலாளர் அறிவுறுத்தினார். அதன்படி, கடலூர் செம்மங்குப்பத்தில் புயல் பேரிடர் மாதிரி ஒத்திகை பயிற்சி இன்று காலை நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் அருண்தம்புராஜ்தலைமை தாங்கினார்.

இதில் புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் விடுக்கப்படும் புயல் பேரிடர் ஒத்திகை அறிவிப்புகள் மற்றும் தகவல் பரிமாற்றமானது, அரசுத் துறைகள் மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு எவ்வாறு சென்றடைகிறது என்பது குறித்தும், மீட்பு பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்தும் விரிவாக விளக்கி கூறி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, துணை போலீஸ் சூப்பிரண்டு பிரபுமற்றும்தீயணைப்புத் துறையினர், பேரிடர் மீட்புத்துறையினர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர். இதேபோல் குறிஞ்சிப்பாடி சிறுபாளையூர் (வடக்கு), புவனகிரி சிலம்பிமங்கலம், சிதம்பரம் பெராம்பட்டு, காட்டுமன்னார்கோவில் சர்வராஜன்பேட்டை ஆகிய இடங்களிலும் புயல் பேரிடர்மாதிரிஒத்திகைபயிற்சி நடைபெற்றது.

# பாரா டேக்வண்டா போட்டியில் பாப்பிரெட்டிப்பட்டி மாற்றுத்திறனாளி மாணவன் தங்கம் வென்று சாதனை

தருமபுரி,செப். 3



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த பூதநத்தம் கிராமத்தைச் சார்ந்த இளவரசன் ஜெயந்தி தம்பதியின் மகன் இசையமுதன். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விபத்தில் இளவரசன் உயிரிழந்தார். இந்த விபத்தில் இசையமுதன் பலத்தகாயம் அடைந்தார். இதனை அடுத்து சிறிய வீட்டில் வசித்து வரும் ஜெயந்தி, பெட்டி கடை வைத்து தனது குழந்தைகளை படிக்க வைத்து வருகிறார். மேலும் மாற்றுத் திறனாளியான இசை அமுதன் பள்ளி மற்றும் கிராமத்தில் சாதாரண மாணவர்கள் கலந்து கொள்ளும் செஸ், டென்னிஸ் என அனைத்து வகை போட்டிகளிலும், அவர்களுக்கு நிகராக கலந்து கொண்டு விளையாடி வருகிறார். மேலும் டேக்வாண்டா பயிற்சி பெற்றுக் கொண்டு, தருமபுரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற அனைத்து வகையான டேக்வாண்டோ போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்று பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். இந்நிலையில் கடந்த மாதம் தேசிய அளவில் பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் நடைபெற்ற, பாரா டேக்வாண்டா போட்டியில் கலந்து கொண்டு தமிழகத்தில் முதலிடம் பெற்று, 4 தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம் என 9 பதக்கங்களை பெற்றுள்ளார். இதில் இசை அமுதன் முதலிடத்தில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். இந்த வெற்றியின் மூலம் இசைஅமுதன் உலக அளவில் டிசம்பர்மாதம்மெக்ஸிகோவில் பாரா டேக்வாண்டா போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார். உலக அளவில் நடை பெறும் பாராடேக் வாண்டோ போட்டி யில் பங்கேற்கும் மாற்றுத் திறனாளி மாணவன் இசை அமுதனை, இந்தியா டேக்வாண்டோ சங்கத்தின் துணைத் தலைவரும் டேக்வாண்டோ அசோ சியேஷன் தமிழ்நாடு தலை வருமான சாக்ரடீஸ் நேரில் சென்று பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.




# சாலையின் தடுப்பு சுவரில் லாரி மோதி விபத்து

அந்தியூர், செப். 3

உருளைக்கிழங்கு லோடு ஏற்றி வந்த லாரி சாலையின் தடுப்பு சுவரில் மோதியது.

டிரைவர் எந்தவித காயமும் இன்றி உயிர் தப்பினார்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் பஸ் நிலையம் அருகே இன்று அதிகாலை 4 மணி அளவில் பெங்களூரில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு உருளைக்கிழங்கு லோடு ஏற்றி வந்த லாரி சாலையின் தடுப்பு சுவரில் மோதியது.

இதில் லாரியின் முன்பக்கம் சேதம் ஏற்பட்டது. டிரைவர் எந்தவித காயமும் இன்றி உயிர் தப்பினார்.

விடியற்காலை நேரம் என்பதால் டிரைவர் கண் அயர்ந்ததே காரணம் என்று கூறப்படுகிறது. இது குறித்து அந்தியூர் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# அனுப்பர்பாளையத்தில் நாளை மின்தடை

திருப்பூர், செப். 3

துணை மின் நிலையத்தில் மாதாந்திர மின் பராமரிப்பு பணிகள் 4ந் தேதி நடக்கிறது. அன்றைய தினம்காலை 9 மணி முதல் 4 மணிவரை மின் விநியோகம் இருக்காது.

அவினாசி மின்வாரிய செயற்பொறியாளர் பரஞ்ஜோதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது: வேலம்பாளையம், நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா துணை மின் நிலையத்தில் மாதாந்திர மின் பராமரிப்பு பணிகள் 4ந் தேதி நடக்கிறது. எனவே அன்றைய தினம் காலை 9 மணி முதல் 4 மணிவரை பச்சாம்பாளையம், பரமசிவம்பாளையம், பெரியாயிபாளையம், பள்ளிபாளையம், பொங்கு பாளையம், காளம்பாளையம், பழையஊஞ்சப்பாளையம்,புதுஊஞ்சபாளையம், குப்பாண்டம்பாளையம், துலுக்கமுத்தூர், நல்லாத்துப்பாளையம், வ.அய்யம்பாளையம், ஆயிகவுண்டம்பாளையம், வேலூர், மகாராஜா கல்லூரி, எஸ்.எஸ்.நகர், வீதிக்காடு, முட்டியங்கிணறு, திருமலை நகர், பெ.அய்யம்பாளையம் ஒருபகுதி, கணக்கம்பாளையம் சிட்கோ, ஆத்துப்பாளையம், 15 வேலம்பாளையம், அனுப்பர்பாளையம், திலகர் நகர், அங்கேரிபாளையம், பெரியார் காலனி, அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் புதூர், வெங்கமேடு, மகாவிஷ்ணு நகர், தண்ணீர் பந்தல் காலனி, ஏ.வி.பி. லேஅவுட், போயம் பாளையம், சக்தி நகர், பாண்டியன் நகர், நேரு நகர், குருவாயூரப்பன் நகர், நஞ்சப்பா நகர், லட்சுமி நகர், இந்திரா நகர்,பிச்சம்பாளையம் புதூர், குமரன் காலனி, செட்டிபாளையம், கருப்பராயன் கோவில் பகுதிகளில் மின்தடை ஏற்படும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 6 டன் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சிக்காக தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பு

வெள்ளகோவில், செப். 3

6 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் தொழிற்சாலைக்கு அனுப்பி வைத்தனர். குப்பைகளைமக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சி தூய்மை பணியாளர்களிடம் கொடுக்க வேண்டும்.




வெள்ளகோவில் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் இருந்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரித்து வருகின்றனர். மக்கும் குப்பையை உரமாக்கவும், பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி பயன்பாட்டிற்காக அரியலூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. நேற்று 6 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் தொழிற்சாலைக்கு அனுப்பி வைத்தனர். நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களது வீடுகளில் உள்ள குப்பைகளைமக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சி தூய்மை பணியாளர்களிடம் கொடுத்து உதவ வேண்டுமாறு நகர்மன்ற தலைவர் மு. கனியரசி மற்றும் ஆணையாளர் எஸ்.வெங்கடேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சாலையோரம் கவிழ்ந்த சரக்கு வேன்

பல்லடம், செப். 3

கோடங்கிபாளையம் அருகே சென்ற போது நிலை தடுமாறி ரோட்டோரம் உள்ள பள்ளத்தில் சரக்கு வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. சம்பவ இடம் சென்ற பல்லடம் போலீசார் அவர்களை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ள ராவுத்தூர் பிரிவில் தனியாருக்கு சொந்தமான பழைய இரும்பு கடை செயல்படுகிறது. பல்லடம் அருகே உள்ள கோடங்கிபாளையம் ஊராட்சி ராசா கவுண்டம்பாளையம் என்ற இடத்தில் இரும்பு லோடை இறக்கிவிட்டு, கோடங்கிபாளையம் நோக்கி சரக்குவேன் சென்று கொண்டிருந்தது. வேனை பீகாரைச் சேர்ந்த ராம் பகதூர் பிஸ்வான் என்பவரது மகன் ராஜிவ் பிஸ்வான்(வயது 44), என்பவர் ஓட்டி சென்றார். வேனின் பின்புறம் பீகாரைச் சேர்ந்த ராம் கிஷான், பஸ்வான் மகன் பிரேம் பசுவான் வயது (24), மற்றும் தர்மேந்திர மோகியா (வயது 30), ஆகியோர் அமர்ந்திருந்தனர். கோடங்கிபாளையம் அருகே சென்ற போது நிலை தடுமாறி ரோட்டோரம் உள்ள பள்ளத்தில் சரக்கு வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் வேனில் இருந்த மூவரும் காயம் அடைந்தனர்.

அந்த வழியே சென்றவர்கள் கொடுத்த தகவலை அடுத்து சம்பவ இடம் சென்ற பல்லடம் போலீசார் அவர்களை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து பல்லடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# அவினாசியில் உடைமைகளை தரமறுப்பதாக குடியிருந்த வீட்டின் முன் தொழிலாளி தர்ணா

அவினாசி, செப். 3

கொரோனா சமயத்தில் பிரச்சனை ஏற்பட்டு நாககுமார் வீட்டை காலி செய்து வேறு வீட்டிற்கு சென்று விட்டார். தான் குடியிருந்த வீட்டில் வைத்திருந்த தனது பொருட்கள் உள்ளிட்ட உடைமைகளை வீட்டு உரிமையாளர் தரமறுக்கிறார்.





திருப்பூர் மாவட்டம் அவினாசி ரங்கா நகர் பகுதியை சேர்ந்த வேலுசாமி என்பவரது வீடு கமிட்டியார்காலனி பகுதியில் உள்ளது. இந்த வீட்டில் கடந்த 2020ம் ஆண்டு முதல் நாககுமார்(வயது 50) என்பவர் குடும்பத்துடன் வாடகைக்கு குடியிருந்ததாக கூறப்படுகிறது. கொரோனா சமயத்தில் பிரச்சனை ஏற்பட்டு நாககுமார் வீட்டை காலி செய்து வேறு வீட்டிற்கு சென்று விட்டார். இந்த நிலையில் நேற்று தான் குடியிருந்த வீட்டில் வைத்திருந்த தனது பொருட்கள் உள்ளிட்ட உடைமைகளை வீட்டு உரிமையாளர் தரமறுக்கிறார் என்று நாககுமார் மற்றும் அவரது உறவினர்கள் குடியிருந்தவீட்டின் முன் தரையில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்து அவினாசி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜவேல், சப் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் உங்கள் பிரச்சனை குறித்து கோர்ட்டில் வழக்கு தொடுத்து தீர்வுகாணுங்கள் என்று கூறியதையடுத்து தர்ணா போராட்டத்தை கைவிட்டு அவர்கள் கலைந்து சென்றனர்.

# உகாயனூர் ஊராட்சியில் ஆதார் சிறப்பு முகாம்

பல்லடம், செப். 3

குழந்தைகளுக்கு 5 மற்றும் 15 வயதில் கைரேகை மற்றும் கருவிழி பதிவை கண்டிப்பாக புதுப்பிக்க வேண்டும். இந்த முகாமில் புதிதாக அஞ்சலக கணக்கும் துவங்கலாம்.

பல்லடம் அருகே உள்ள உகாயனூர் ஊராட்சியில் ஆதார் சிறப்பு முகாம் நேற்று ஊராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதனை ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி கனகராஜ் தொடங்கி வைத்தார். உகாயனூர் ஊராட்சி மற்றும் தபால் அலுவலகம் இணைந்து 2 நாட்கள் நடத்தும் இந்த முகாமில் பெயர், முகவரி, பிறந்த தேதி, செல்போன் எண் மற்றும் பாலினம் ஆகியவை திருத்தம் செய்யலாம். புதிதாக திருமணம் ஆனவர்கள் திருமண பதிவு சான்று அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று இருந்தால் புதிதாக ஆதார் அட்டை பெற்றுக் கொள்ளலாம்.



குழந்தைகளுக்கு 5 மற்றும் 15 வயதில் கைரேகை மற்றும் கருவிழி பதிவை கண்டிப்பாக புதுப்பிக்க வேண்டும். புகைப்பட சான்றுக்காக பான், பாஸ்போர்ட், ரேசன் கார்டு, டிரைவிங் லைசென்ஸ் கொண்டு வரவும். மேலும் வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது, பேங்க் பாஸ் புக் ஆகியவை முகவரி சான்றுக்காகவும், பிறப்பு சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகியவை பிறந்த தேதி சான்றுக்காகவும் கொண்டு வர வேண்டும். இந்த முகாமில் புதிதாக அஞ்சலக கணக்கும் துவங்கலாம். இந்த முகாம் இன்றும் நடைபெறுகிறது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# நிலக்கோட்டையில் 10 செ.மீ. பதிவு தொடர்மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி



நிலக்கோட்டை, செப். 3

நிலக்கோட்டை, தோப்புப்பட்டி, கோடாங்கிநாயக்கன் பட்டி, என். ஊத்துப்பட்டி, குளத்துப்பட்டி, சீத்தாபுரம், கோட்டூர், முசுவனூத்து, அணைப்பட்டி, விளாம்பட்டி பகுதியில் விவசாயிகள் ஏராளமான ஏக்கர் பரப்பளவில் பூ மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக கோடைகாலத்தை மிஞ்சி வெயில் சுட்டெரித்து வந்தது. இதனால் பொது மக்கள் சிரமமடைந்தனர். இந்த நிலையில் நேற்று இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி ஏற்பட்டது. ஆங்காங்கே மரங்களும் சாய்ந்தது. இருந்த போதும் தொடர்மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதையும் படியுங்கள்: திருப்பூர் மாவட்டத்தில் கெட்டுப்போன உணவுகளை வைத்திருந்த 27 கடைகளுக்கு அபராதம் தற்போது உழவு பணியில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பல இடங்களில் ஓடைகள் ஆக்கிரமிக்கப்பட்டதால் தண்ணீர் தேங்கி சாலையில் ஓடியது. இதனால் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். எனவே ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கனமழைகாரணமாகவறண்டு கிடந்த அணைப்பட்டி வைகை ஆற்றுப்படுகையில் நீண்ட நாட்களுக்கு பிறகு அதிக அளவில் தண்ணீர் வரத்து ஏற்பட்டது. திண்டுக்கல் 34, கொடைக்கானல் ரோஸ்காடன் 36.5, பழனி 5, சத்திரப்பட்டி, 57.6, நிலக்கோட்டை 104.6, வேடசந்தூர் 19.5, புகையிலை நிலையம் 19.5, காமாட்சிபுரம் 4.7 மி.மீ. என மொத்தம் மாவட்டம் முழுவதும் 326.6 மி.மீ. மழையளவு பதிவாகி உள்ளது.

# தூர்ந்துபோன கடைமடை கால்வாய்; 100 ஏக்கர் விவசாயம் பாதிப்பு



ராமநாதபுரம், செப். 3

தூர்ந்துபோன கடைமடை கால்வாய்; 100 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கர் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் நாரணமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட வடக்கனேந்தல் யூனியன் கண்மாயை நம்பி அப்பகுதி விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். சுமார் 100 ஏக்கரில் நெல், மிளகாய் விவசாயம் செய்து வரக்கூடிய சூழ்நிலையில் வானம் பார்த்த பூமியான அங்கு மழை பெய்தால் மட்டுமே நரியனேந்தல், அரசனூர் கண்மாயில் இருந்து வடக்கு னேந்தல் கண்மாய்க்கு நீர்வரத்து வரும். வடக்கநேந்தல் கண்மாய் 4 கடைமடையை கொண்டது. இந்த மடைகள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது.

கட்டிய சில வருடங்களிலேயே மடைகள் அனைத்தும் சேதம் அடைந்து முழுவது மாக இடிந்தது. முற்றிலும் மடைகள் தூர்ந்து போனதால் சிறிய துளை கூட இல்லாத அளவிற்கு மணல் மூடி உள்ளது.

இதனால் கண்மாயில் இருந்து விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது.

கடந்த 2 வருடங்களாக மாவட்ட கலெக்டர் உள்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மடைகளை பராமரிப்பு செய்து கொடுக்க கோரி பல்வேறு மனுக்கள் கொடுத்தும் இதுவரை அதிகாரிகள் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. விவசாய காலம் தொடங்குவதற்கு முன்பாக 4 மடையையும் பராமரிப்பு செய்து கொடுத்தால் மட்டுமே இந்த ஆண்டு விவசாயம் செய்ய முடியும்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் கடுமையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிகாரிகளின் அலட்சியத்தால் மடையை சீரமைக்காததால் இந்த ஆண்டும் விவசாயம் சுமார் 100 ஏக்கர் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

# விவசாயியை தாக்கிய 3 பேர் கைது

கள்ளக்குறிச்சி, செப். 3

கிணறு வெட்டுவதற்காக அதே ஊரை சேர்ந்த மதி என்பவரிடம் ஒப்பந்தம் செய்தார். ஆபாசமாக திட்டி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

சங்கராபுரம் அருகே ராஜபாண்டலம் கிராமத்தை சேர்ந்தவர் மாரி (வயது68) விவசாயி.

இவர் தனது நிலத்தில் புதியதாக கிணறு வெட்டுவதற்காக அதே ஊரை சேர்ந்த மதி(58) என்பவரிடம் ஒப்பந்தம் செய்தார்.

இந்நிலையில் கிணறு வெட்டும் பணியை மதி காலதாமதம் செய்ததால், கிணறுவெட்டும்பணியை மாரி வேறு நபருக்கு கொடுத்துள்ளார்.

இதில் ஆத்திரமடைந்த மதி குடும்பத்தினர் மாரியை ஆபாசமாக திட்டி, தாக்கி, கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்து மாரி கொடுத்த புகாரின் பேரில் சங்கராபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து மதி, மற்றும் அவரது மகன்கள் அஜித்(32), வல்லரசு(20) ஆகியோரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# சாலை பள்ளத்தில் குடிநீர் லாரி சிக்கியது

ஆம்பூர், செப்.3

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் டவுன் பஸ் நிலையம் அருகே, தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது. இதற்காக தோண்டப்பட்ட பள்ளத்தில், இன்று காலை அந்த வழியாக சென்ற ஆம்பூர் நகராட்சி குடிநீர் லாரி சிக்கிக்கொண்டது. நீண்ட நேரம் ஆகியும் லாரி வெளியே எடுக்க முடியவில்லை.

இதனால் காலை ஆறு 6 முதல் 7 மணி வரை கடும் போக்குவரத்து பாதித்தது. பஸ் பயணிகள், பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கடும் அவதி அடைந்தனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, போக்குவரத்தை மாற்றம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து பள்ளத்தில் சிக்கிய லாரி மீட்கப்பட்டு, சாலை சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

# ம.தி.மு.க. மாநாட்டு பணிகள் தீவிரம்



மதுரை, செப். 3

ம.தி.மு.க. மாநாட்டு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. மாநாடு நடைபெற உள்ள இடத்தை பூமிநாதன் எம்.எல்.ஏ. இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மதுரை வலையங் குளத்தில் வருகிற 15 ந்தேதி அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ம.தி.மு.க. சார்பில் மாநில மாநாடு நடைபெற உள்ளது. இதில் அந்த கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ மற்றும் எம்.எல்.ஏ.க்கள், முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசுகின்றனர். மாநிலம் முழுவதும் இருந்து திரளான ம.தி.மு.க. தொண்டர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதையொட்டி வலையங்குளத்தில் பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளது. இதனை பூமிநாதன் எம்.எல்.ஏ. பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது மாநகர் மாவட்ட செயலாளர் முனியசாமி, புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் மார்நாடு, தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயராமன் பொருளாளர் சுருதி ரமேஷ்.பார்வையிட்டனர்.

இதில் நிர்வாகிகள் சுப்பையா, கீரைத்துரைபாண்டியன் பாஸ்கரசேதுபதி, பச்சமுத்து. புகழ்முருகன், மாயழகு., அய்யனார். காளிமுத்து முத்துலெட்சுமி.. கரு.சுந்தர், அன்னமுகமது, கவுரி மகேஷ், திருப்பரங்குன்றம் முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

# சமுதாயக்கூடம் அங்கன்வாடி மையங்கள் திறப்பு

விருதுநகர், செப்.2

சமுதாயக்கூடம் அங்கன்வாடி மையங்கள் திறக்கப்பட்டது. மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

விருதுநகர் யூனியன் ஆமத்தூர் கிராமத்தில் ரூ. 25 லட்சம் மதிப்பில் சமுதாயக்கூடம், ரூ. 23.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 அங்கன்வாடி மைய கட்டிடங்களை விருதுநகர் யூனியன் தலைவர் சுமதி ராஜசேகர் தலைமையில் சீனிவாசன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

இந்த விழாவில் விருதுநகர் யூனியன் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் சீனிவாசன், கற்பக வல்லி, யூனியன் கவுன்சிலர் அமுதாசெல்வராஜ், ஆமத்தூர் பஞ்சாயத்து தலைவர் குறிஞ்சி மலர், அழகர்சாமி, வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஆவுடையம்மாள் மற்றும் பஞ்சாயத்து கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சீனிவாசன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு குறைகளை கேட்டறிந்தார். பின்னர் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

# அரசு பள்ளி முதல் ஆதித்தயா எல்1 வரை தடைகளை தகர்த்து சாதனையாளர் ஆன நிகர் ஷாஜி



சென்னை, செப்.3

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பெண்களின் பங்கு முன்னேற்றத்தை கண்டு வருகிறது. குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சியில் பெண்களின் உழைப்பு நாட்டின் மேம்பாட்டுக்கு மேலும் பலத்தை கொடுக்கிறது. சமீப காலமாக விண்வெளிக்கு ஏவப்பட்ட ராக்கெட் திட்டங்களில் தமிழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகளின் பங்கும் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் அரசு பள்ளியில் படித்து விண்வெளி ஆராய்ச்சியின் உச்சத்திற்கு சென்று பெருமைபடுத்தி வருகின்றனர் தமிழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள். அதில் ஒருவர் தான் இஸ்ரோ விஞ்ஞானி நிகர் ஷாஜி. தமிழ்நாட்டின் செங்கோட்டையைச் சேர்ந்தவர் நிகர் ஷாஜி. 59 வயதான இவர் அரசு பள்ளியில் படிப்பை முடித்தார். 10ம் வகுப்பில் மாவட்டத்தில் முதல் இடம். 12ம் வகுப்பில் பள்ளியில் முதல் இடம். பின்னர், திருநெல்வேலியில் உள்ள கல்லூரி ஒன்றில் பொறியியல் பட்டப்படிப்பை முடித்த ஷாஜி ராஞ்சியில் உள்ள பிர்லா தொழில்நுட்ப கல்லூரியில் எம்.டெக் பட்டம் பெற்றார். விண்வெளி ஆராய்ச்சியில் இருந்த ஆர்வத்தில் இருந்த ஷாஜி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்தார். அங்கு, பல்வேறு விண்கல திட்டங்களில் தனது பணியை முழு அர்ப்பணிப்போடு செய்து வந்தார். இந்நிலையில், 8 ஆண்டுகளுக்கு முன்பு ஆதித்யா எல்1 விண்கல தட்டத்திற்கு தலைமைப் பொறுப்பு ஏற்றார். ஆதித்யா எல் 1 விண்கலத்தின் திட்ட இயக்குனராக சூரியனின் ஆய்வுக்காக வெற்றிகரமாக விண்ணில் ஏவிய நிகர் ஷாஜி இன்று மேடையேறி "கனவு நிறைவேறிவிட்டதாக" பெருமையுடன் கூறினார். இது குறித்து ஆதித்யா எல்1 வெற்றி குறித்து நிகர்ஷாஜி கூறுகையில், "நான் எட்டு ஆண்டுகளாக இந்த சிக்கலான திட்டத்திற்கு தலைமை தாங்குகிறேன். இது ஒரு சவாலான திட்டம். ஒளிவட்டப் பாதையில் விண்கலத்தை நிலை நிறுத்துவது பெரும் சவாலாக இருந்தது. இன்று கனவு நிறைவேறிவிட்டது" என்றார். நிகர் ஷாஜியின் கணவர் மெக்கானிக்கல் இன்ஜினியர், துபாயில் பணிபுரிகிறார். மகன் பிஎச்.டி படித்து நெதர்லாந்திலும், மகள் தகுதியான மருத்துவராகவும் முதுகலை படித்து வருகிறார். ஏற்கனவே, சந்திரயான்2 திட்டத்தில் திட்ட இயக்குநர் எம்.வனிதா மற்றும் மிஷன் இயக்குநர் ரிது கரிதால் ஸ்ரீவஸ்தவா ஆகிய இரு பெண்கள் முக்கியப் பங்காற்றினர். இதேபோல் சந்திரயான்3 திட்டத்திலும் துணை இயக்குனர் கல்பனா முக்கிய பங்கு வகித்தார்.

# மகளிர் உரிமை திட்ட விண்ணப்பங்களை கள ஆய்வு செய்யும் பணிகள் தீவிரம்



சீர்காழி, செப்.3

மாணவர்களின் கற்றல் திறன் வளர்ந்து தேர்ச்சி சதவீதம் உயரும். ரூ.12 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பீட்டில் அண்ணாகுளம் மேம்படுத்தப்பட்டு வருவதை ஆய்வு செய்தார்.

சீர்காழி அடுத்த கொள்ளிடம் ஒன்றியத்தில் ரூ.48 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ளப்படுவதை வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள மகேந்திரப்பள்ளி, புளியந்துறை ஆகிய பகுதிகளில் ரூ.48 லட்சத்து 33 ஆயிரம் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆச்சாள்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியினை பார்வையிட்டு, 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்து, வாசிப்பு பழக்கத்தை உருவாக்கி, தினசரி பாடங்களை அன்றைக்கே நிறைவு செய்யும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களின் கற்றல் திறன் வளர்ந்து, தேர்ச்சி சதவீதம் உயரும் என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், மகேந்திரப்பள்ளிஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளதை பார்வையிட்டு, பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, புளியந்துறை கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.8 லட்சத்து 9 ஆயிரம் மதிப்பீட்டில் சமையல் கூடம் கட்டப்பட்டு வருவதையும், புளியந்துறை கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.12 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பீட்டில் அண்ணாகுளம் மேம்படுத்தப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், மகேந்திர ப்பள்ளி மற்றும் புளியந்துறை கிராமங்களில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பப் பதிவு முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களை கள ஆய்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், சீர்காழி தாசில்தார் செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தியாகராஜன், அருள்மொழி, ஊராட்சி மன்ற தலைவர் இளவரசி சிவபாலன் மற்றும் ஒன்றிய பொறியாளர்கள் தாரா, பூரணசந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தீர்வு காணப்படாத வழக்குகளில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்

வேலூர், செப்.3

வேலூர் மாவட்டத்தில் உள்ள போலீஸ் நிலையங்களில் நீண்ட நாட்கள் கிடப்பில் உள்ள வழக்குகளில் தீர்வு காண்பதற்காக வேலூர், காட்பாடி, குடியாத்தம்சப்டிவிஷன்களில் சிறப்பு குறை தீர்வு முகம் இன்று நடந்தது. வேலூர் கோட்டை சுற்றுசாலையில் உள்ள காவலர் திருமண மண்டபத்தில் நடந்த குறைதீர்வு முகாமைவேலூர்போலீஸ் சூப்பிரண்டு மணிவண்ணன் தொடங்கி வைத்தார்.

வழக்கு சம்பந்தப்பட்ட 200க்கும் மேற்பட்டவர்கள் முகாமில் கலந்து கொண்டனர். பின்னர் போலீஸ் சூப்பிரண்டு மணிவண்ணன் கூறுகையில் அந்தந்த சப் டிவிஷனில் உள்ள டிஎஸ்பிக்கள், இன்ஸ்பெக்டர்கள் முன்னிலையில் நீண்ட நாள் தீர்வு காணப்படாத வழக்குகள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கு சம்பந்தப்பட்ட 2 தரப்பை சேர்ந்தவர்களையும் வரவழைத்து விசாரணை நடத்தி காணப்படுகிறது.

தீர்வு காணப்படாத வழக்குகளில் மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கோத்தகிரியில் ஆரோக்கிய மாதா ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



அரவேணு, செப். 3

கோத்தகிரியில் உள்ள புனித ஆரோக்கிய மாதா ஆலயம் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் தேர்த்திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்தாண்டுக்கான திருவிழா வருகிற 11ந்தேதி நடைபெறஉள்ளது. இதையொட்டி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நேற்று மாலை 5 மணிக்கு திருவிழாவுக்கான கொடியேற்றம் நடைபெற்றது. கோத்தகிரி ஆலய பங்கு தந்தை அமிர்தராஜ், எமரால்டு ஆலய பங்குத் தந்தை ஞானதாஸ் ஆகியோர் தலைமையேற்று கொடியேற்றத்தை தொடங்கி வைத்தனர். பின்னர் மாலை 5.30 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. கோத்தகிரி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு திருப்பலி மற்றும் நற்கருணை பவனி நடைபெறுகிறது. தொடர்ந்து தினமும் திருப்பலிகள் நடக்க உள்ளது. திருவிழாவின் முக்கிய நாளான 11ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தமிழ், ஆங்கிலத்தில் திருப்பலியும், 8 மணிக்கு கூட்டுபாடல் திருப்பலியும் நடைபெறுகிறது. தொடர்ந்து அருட்தந்தை ஜெயகுமார் தலைமையில் மாலை 6.15 மணிக்கு திருத்தேர்பவனி நடக்க உள்ளது. அப்போது அலங்கரிக்கப்பட்ட தேரில் ஆரோக்கிய அன்னை வீற்றிருந்து நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஆடம்பர தேர்பவனி நடைபெறுகிறது. தொடர்ந்து ஆலயத்தில் தேவ நற்கருணை ஆசீர் வழங்கும் நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவு பெறுகிறது. கோத்தகிரி புனித ஆரோக்கிய மாதா ஆலய திருவிழாவை முன்னிட்டு தேவாலய வளாகம் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு எழிலுடன் காட்சியளிக்கிறது.

# விஜயகாந்த் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

திருப்பத்தூர் , செப். 3

தமிழகம் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மத்தியில் கடந்த 25ந் தேதி முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தே.மு.தி.க. கட்சி நிறுவனருமான விஜயகாந்தின்71வதுபிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

அதன்அடிப்படையில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பிரபாகர் காலனியில் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகள் பள்ளியில் உள்ள மாண வர்களுக்கு பிறந்த நாளை முன்னிட்டு கேப்டன் உறவு கள் மற்றும் புதிய சகாப்தம் வாட்ஸ் அப் குழு இணைந்து காலை உணவு மற்றும் நோட்டு புத்தகம் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாட்டார் மங்கலம் அரசு பள்ளியில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாநில வழக்கறிஞர் அணி பன்னீர்செல்வம், மாவட்ட பொருளாளர் துரை பாஸ்கர், மாவட்ட அவைத் தலைவர் அருணா கண்ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தனசேகரன், பைசூர்ரகுமான், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் பழனிவேல், திருப்பத்தூர் ஒன்றிய செயலாளர் ஜாபர் அலி, நகர செயலாளர் மாதவன், சிங்கம்புணரி செயலாளர்களான சிவகுமார். பாண்டி, ராக்கெட் ராஜா, கேப்டன் குமார், நாச்சியார்புரம் குமார், மருதங்குடி கணேஷ்பாபு, கல்லல் ஒன்றிய பொறுப்பாளர் நேதாஜி பிரபாகர், கிருஷ்ணன், பிள்ளை யார்பட்டி சரவணன், முத்துப்பாண்டி, பாலு, பழனிவேல், ரமணாராமு, முருகேசன், மாவட்ட ஒன்றிய நகர் கிளைக் கழக நிர்வாகிகள் உடனி ருந்தனர். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளை திருப்பத்தூர் ஒன்றிய நிர்வாகிகளான கேப்டன் பாண்டியன், கேப்டன் முத்த, பழனிவேல் ஆகியோர் செய்திருந்தனர்.



# ரஜினியை நேரில் சந்தித்த ஓபிஎஸ்

நடிகர் ரஜினி நடிப்பில் சமீபத்தில் 'ஜெயிலர்' திரைப்படம் வெளியானது. இப்படம் ரூ.525 கோடிக்கு மேல் வசூலை குவித்தது.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் ரஜினி. இவர் பல டாப் இயக்குனர்களின் படங்களில் நடித்து வருகிறார். தன் நடிப்பினாலும், ஸ்டைலினாலும் ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்த ரஜினியை 'சூப்பர்ஸ்டார்' என்ற பட்டத்துடன் ரசிகர்கள் அழைத்து வருகின்றனர். இவர் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான 'ஜெயிலர்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று ரூ.525 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து ரஜினி மற்றும் நெல்சனுக்கு தயாரிப்பாளர் கலாநிதி மாறன் கார் காசோலைகளை பரிசாக வழங்கினார். இந்நிலையில், நடிகர் ரஜினியை அ.தி.மு.க. முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் நேரில் சென்று சந்தித்தார். சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றஇந்தசந்திப்பில்தற்போதையஅரசியல்சூழ்நிலைகுறித்துபேசப்பட்டதாக கூறப்படுகிறது. இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# லியோ படத்தில் நடிக்க மறுத்த விஷால்.. அவரே கூறிய காரணம்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூதாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின்படப்பிடிப்புநிறைவடைந்துபோஸ்ட்புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், 'லியோ' படத்தில் நடிக்காதது குறித்து நடிகர் விஷால் விளக்கமளித்துள்ளார். அவர் கூறியதாவது, 'மார்க் ஆண்டனி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் போது இயக்குனர் லோகேஷ் 'லியோ' படத்தில் நடிப்பதற்காக கால் ஷீட் கேட்டு வந்தார். நான்கு மாதங்கள் கால் ஷீட் கேட்டார். ஆனால், இரண்டு படங்களும் ஒரே நேரத்தில் செய்ய முடியாது என்பதால் 'லியோ' படத்தை நிராகரித்துவிட்டேன். நான் கண்டிப்பாக விஜய்யை வைத்து படம் இயக்குவேன் என்று பேசினார்.



# இப்போது திருமணம் இல்லை.. தமன்னா திட்டவட்டம்



நடிகை தமன்னா, பாலிவுட் பிரபலம் விஜய் வர்மாவை காதலித்து வருகிறார். இவர் சமீபத்தில் விஜய் வர்மாவுடனான காதலை உறுதி செய்தார்.

தமிழில் விஜய், அஜித், சூர்யா, விஷால், தனுஷ், ரஜினி உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுடன் நடித்துள்ள தமன்னா தெலுங்கு, இந்தியிலும் அதிக படங்களில் நடித்திருக்கிறார். இவர் பாலிவுட் பிரபலம் விஜய் வர்மாவை காதலித்து வருவதாக சமூக வலைதளத்தில் வதந்திகள் பரவி வந்ததையடுத்து சமீபத்தில் விஜய் வர்மாவுடனான காதலை உறுதி செய்தார். இந்நிலையில், நடிகை தமன்னா தற்போது அவருக்கு திருமணம் நடைபெற போவதில்லை என்று கூறியுள்ளார். இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், " திருமணத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒரு கட்டத்தில் திருமணம் செய்துகொள்ள தான் போகிறேன்.

ஆனால், இப்போது அதற்கான மனநிலை இல்லை. என் கேரியர் இப்போது சிறப்பாகச் சென்று கொண்டிருக்கிறது. அதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். விதவிதமான கதாபாத்திரங்களில் நடிக்க வாய்ப்புகள் வருகின்றன. அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன். படப்பிடிப்புதான் இப்போது என் மகிழ்வான இடம்" என்றார் பேசினார்.



# மிமிக்ரியில் பாடல் பாடிய ஹர்ஷினி நேத்ரா.. அசந்து போன நடுவர்கள்



சூப்பர் சிங்கர் மூலம் பல பாடகர்கள் திரையுலகில் அறிமுகமாகி, பிரபல பாடகர்களாக திரைத்துறையில், கோலோச்சி வருகின்றனர். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி பல எளிமையானவர்களின் வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழின் முன்னணி தொலைக்காட்சியான விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி சூப்பர் சிங்கர். இசையில் சிறந்து விளங்குபவர்கள், கலந்துகொள்ளும் இந்த சூப்பர்சிங்கர்பாட்டுநிகழ்ச்சி, கடந்த 10 வருடங்களைக்கடந்து, வெற்றிநடைபோட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி மூலம் பல பாடகர்கள் திரையுலகில் அறிமுகமாகி, பிரபல பாடகர்களாக திரைத்துறையில், கோலோச்சி வருகின்றனர்.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி சீனியர், ஜூனியர் எனப் பிரிவுகளாக இளைஞர்களுக்கும், சிறு வயதினருக்குமாக நடைபெறுகிறது. இந்த பிரிவுகளிலிருந்தும் பல திறமையான பாடகர்கள் திரைத்துறையில் பிரபல பாடகர்களால் பல பாடல்கள் பாடி வருகின்றனர். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி பல எளிமையானவர்களின் வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் இந்த ஜூனியர் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியிலும் பல அற்புதமான நிகழ்வுகள் நடந்து வருகின்றது. கடந்த வார நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இளம் சிறுமி ஹர்ஷினி நேத்ரா, மிமிக்ரி குரலில் பாடல்கள் பாடி அனைவரையும் ஆச்சர்யப்படுத்தினார். ஹர்ஷினி நேத்ரா எளிமையான குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஆவார்.

விழுப்புரம் நகரை சேர்ந்த இவரின் தந்தை ஒரு சிறு கடை நடத்தி வருகிறார். தன் மகளின் பாடகி ஆசையை நிறைவேற்ற அந்த குடும்பமே உழைத்து வருகிறது. ஏழ்மை குடும்பத்தைச்சேர்ந்தவாராகஇருந்தாலும், சூப்பர்சிங்கர்நிகழ்ச்சியில்தன்திறமையால் அனைவரையும் மயக்கி வருகிறார் ஹர்ஷினி நேத்ரா. கடந்த வார நிகழ்ச்சியில் 'ராசாத்தி' பாடல் பாடி அசத்திய அவர் அடுத்ததாக செய்த மிமிக்ரி தான் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. பிரபல பாடகி வைக்கம் விஜயலக்ஷ்மி மற்றும் பாடகி தீ ஆகியோரின் குரலில் அச்சு அசலாக அவர்கள் பாடிய பாடலை பாடி அசத்தி அனைவரையும் மிரள வைத்தார்.

நடுவர்கள் அனைவரும் அவரின் திறமையை பார்த்து வியந்து அவரை வெகுவாக பாராட்டினர். அவர் மிமிக்ரியில் பாடிய வீடியோ தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகிறது. திறமையால் ஒளிரும் பலருக்கு ஒரு ஒரு சிறப்பான மேடையாக சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி விளங்கி வருகிறது.



# ஆசிய கோப்பை 2023 இந்திய அணி டாஸ் வென்று பேட்டிங் தேர்வு



ஆசிய கோப்பை 2023 தொடரில் இன்றைய ஆட்டத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. ஆசிய கோப்பை தொடரின் குரூப் ஏ பிரிவில் இந்தியா மற்றம் பாகிஸ்தான் அணிகள் இடம்பெற்றுள்ள. இன்றைய போட்டி இலங்கையில் உள்ள கண்டியில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்து இருக்கிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடையிலான போட்டி என்பதால், ரசிகர்கள் மற்றும் கிரிக்கெட் வல்லுனர்கள் இடைய இந்த போட்டி மீதான எதிர்பார்ப்பு பலமடங்கு அதிகரித்து இருக்கிறது. ஆசிய கோப்பை 2023 தொடர் துவங்கும் முன்பு தான் பாகிஸ்தான் அணி, சர்வதேச ஒருநாள் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறி இருக்கிறது. ஐ.சி.சி. ஒருநாள் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் இந்திய அணி மூன்றாவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பேர்ஸ்டோவ் அதிரடி 2வது டி20 போட்டியிலும் நியூசிலாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2வது டி20 கிரிக்கெட் போட்டி நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற இங்கிலாந்து பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அதிரடியாக ஆடி 198 ரன்களை குவித்தது. தொடக்க ஆட்டக்காரர் பேர்ஸ்டோவ் 60 பந்தில் 84 ரன்னும், ஹாரி புரூக் 36 பந்தில் 67 ரன்னும் எடுத்தனர். இதையடுத்து, 199 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்நியூசிலாந்துகளமிறங்கியது.இங்கிலாந்து அணியின் துல்லியமான பந்துவீச்சில் சிக்கி விரைவில் விக்கெட்களை இழந்தது. இறுதியில், நியூசிலாந்து அணி 103 ரன்களில் ஆல் அவுட்டானது. இதன்மூலம் இங்கிலாந்து 95 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மேலும் டி20 தொடரில் இங்கிலாந்து 20 என முன்னிலை வகிக்கிறது. இங்கிலாந்து சார்பில் அட்கின்சன் 4 விக்கெட் வீழ்த்தினார். பேர்ஸ்டோவ் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார். 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரின் 3வது போட்டிநாளைநடைபெற இருக்கிறது.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ் இரட்டையர் பிரிவின் 2வது சுற்றிலும் போபண்ணா ஜோடி வெற்றி

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் அந்நாட்டின் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. ஆண்கள் இரட்டையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் போபண்ணா ஜோடி வென்றது.

நியூயார்க்: கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டென் ஜோடி, ரஷியாவின் ரோமன் சபியுலின் கஜகஸ்தானின்ஆண்ட்ரூகொலுபேவ்ஜோடியுடன்மோதியது.இதில்போபண்ணா ஜோடி 63, 63 என்ற நேர்செட்டில் எளிதில் வென்று 3வது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தது.

# 2வது டி20 போட்டியிலும் வெற்றி தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரை கைப்பற்றியது ஆஸ்திரேலியா



கேப்டவுன்: தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி மூன்று டி20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. அதன்படி, இவ்விரு அணிகளுக்கு இடையே நடந்த முதலாவது டி20 போட்டியில் ஆஸ்திரேலிய அணி 111 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, டி20 தொடரில் ஆஸ்திரேலியா 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இந்நிலையில், இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது டி20 போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 164 ரன்கள் சேர்த்தது. மார்க்ரம் 49 ரன்களில்ஆட்டமிழந்தார். பவுமா 35 ரன்களில் வெளியேறினார். டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 27 ரன்கள் எடுத்து போல்ட் ஆனார். ஆஸ்திரேலியா சார்பில் அபாட், நாதன் எலீஸ் தலா 3 விக்கெட்டும், பெஹ்ரெண்டார்ப் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 165 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. டிராவிஸ் ஹெட் 18 ரன்னில் அவுட்டானார். மேத்யூ ஷார்ட் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 30 பந்தில் 66 ரன் குவித்து ஆட்டமிழந்தார். மிட்செல் மார்ஷ் 39 பந்தில் 79 ரன்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றி பெறச்செய்தார். இதன்மூலம் ஆஸ்திரேலியா 168 ரன்கள் எடுத்து வென்று டி20 தொடரை 20 என கைப்பற்றியது. 3 விக்கெட் வீழ்த்திய அபாட் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.